# *தமிழ் மென்பொருள்களும் மக்கள் பாவனையும்*

*சிவா அனுராஜ் – வட அமெரிக்கா*. **tamilambu@yahoo.com**
*நிர்வாக இயக்குனர் – புலம்பெயர் தமிழர் உலகம்* **(NRT World Inc.)**
------------------------------------------------------------------------------------------------------------

*கணினி மற்றும் இணையம் போன்றவற்றின் பாவனையில் தமிழ் மென்பொருள்களின் இருப்பும் பாவனையும் தொடர்பாக 'தமிழ் மென்பொருள்களும் மக்கள் பாவனையும்' என்ற தலைப்பிலான இந்த கட்டுரை ஆராயவிருக்கிறது. கடந்த 7 வருடங்களாக கணினி, இணையம் போன்றவற்றின் தமிழ் பாவனையாளர்களுடன் எனக்கு இருந்துவந்த நெருக்கமான தொடர்பு இந்தக் கட்டுரையை வரைவதற்கு தூண்டுதலாக அமைந்ததுடன் இங்கே ஆராயும் விடயங்களின் உண்மைத்தன்மையையும் நியாயப்படுத்தும்.*

*முதலாவதாக, கணினி மற்றும் இணையப் பாவனையில் தமிழ் மென்பொருள்களின் இருப்பு தொடர்பாக ஆராயும்போது பிரதானமாக விடயங்களாக பின்வருவன எடுத்துக்கொள்ளப்படுகின்றன.*

*தற்பொழுது பாவனையில் உள்ள தமிழ் மென்பொருள்கள்.*
*தற்பொழுது பாவனையில் பல தமிழ் மென்பொருள்கள் உள்ளன. இவற்றில் தமிழினை பாவிற்பதற்கான ஒருதொகுதி மென்பொருள்களும் தமிழில் பாவிப்பதற்கான ஒரு தொகுதி மென்பொருள்களும் அடங்கும். தமிழினை பாவிக்கும் மென்பொருள்களில் தமிழில் தட்டச்சு செய்வது, மின்னஞ்சல் அனுப்புவது, இணைய அரட்டையின்போது எனவும் தமிழ் சொல்திருத்தி, கையெழுத்து உணரி, தமிழ் அச்செழுத்து உணரி எனவும் பலவகையானவை உள்ளன. அடுத்து, ஏனைய அனைத்து மென்பொருள்களும் தமிழ் இடைமுகப்புடன் வரும்பொழுது அவை தமிழில் பாவிக்கும் மென்பொருள்கள் என கருதப்படும்.*

*அந்த மென்பொருள்கள் தற்போதைய தேவையை பூர்த்திசெய்கிறதா?*
*தற்போது பாவனையில் உள்ள இவ்வாறான தமிழ் மென்பொருள்கள் மக்களின் தற்போதைய தேவையை பூர்த்திசெய்கிறதா என்றால், இல்லை என்பதே அதற்கான பதிலாக கிடைக்கும். இப்பொழுது உள்ள மென்பொருள்களில் பல பரிசோதனை நிலையிலும், மக்களின் உண்மையான தேவையை பூர்த்திசெய்வதாக இல்லாமலுமே இருக்கின்றன.*

*மேலதிகமாக எவ்வாறான தேவைகள் உள்ளன.*

தமிழ் மென்பொருள்களை பொறுத்தவரையில் மக்களின் உண்மையான தேவைகள் என்று பார்க்கும்பொழுது பிரதானமாக அவர்கள் சார்ந்துள்ள பிரதேசத்தைப்பொறுத்து இரண்டு வகைப்படும். புலத்தில் உள்ள மக்கள், அதாவது இலங்கை மற்றும் இந்தியாவில் உள்ள மக்களைப் பொறுத்தளவில் தமிழில் பாவிக்கும் மென்பொருள்களின் தேவையே அதிகமாகும். ஏனெனில் ஆங்கிலத்தில் உள்ள ஏனைய மென்பொருள்களை பாவிப்பதில் அவர்களின் மொழி அறிவு தற்பொழுது பெரும் தடையாக இருக்கிறது. ஆனால் புலம்பெயர் மக்களை பொறுத்தளவில் தமிழினைப்பாவிக்கும் மென்பொருள்களே பிரதான தேவையாக இருக்கின்றது. இந்த இரு வகைகளிலும் இப்பொழுது பாவனையில் உள்ளவை ஒருசிலவே.

அவற்றினை எவ்வாறு நிவர்த்திசெய்யலாம்.
தற்பொழுது உள்ள மென்பொருள்களை சரியான முறையில் வரிசைப்படுத்துவதன் மூலம் இன்னமும் மக்களுக்கு தேவையாக உள்ள மென்பொருள்களை இலகுவாக அடையாளப்படுத்த முடியும். அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட மென்பொருள்களை சரியான முறையில் ஆய்வுசெய்து மென்பொருள் வடிவமைப்பாளர்களிற்கு கொடுப்பதன்மூலம் சிறந்த மென்பொருள்களினை மக்களிற்கு தரமுடியும்.

அடுத்ததாக, கணினி மற்றும் இணையப் பாவனையில் தமிழ் மென்பொருள்களின் பாவனை என்று பார்த்தால் பாவனையாளர்களே கருத்தில் கொள்ளப்படவேண்டியவர்கள். அந்தவகையில்,

பாவனையில் உள்ள தமிழ் மென்பொருள்கள் சரியான முறையில் பாவனையாளர்களிம் சென்றடைந்திருக்கிறதா?
தற்பொழுது பல விதமான உயர் பாவனைத்திறன் கொண்ட தமிழ் மென்பொருள்கள் உள்ளபோதிலும் அவை பெரும்பாலான மக்களிடன் சென்றடையவில்லை என்பதே உண்மை. இதற்கு உதாரணமாக, சாதாரணமான தமிழ் தட்டச்சுக்கு உதவும் மென்பொருள்கூட பெரும்பாலான தமிழ் கணினி மற்றும் இணையப் பாவனையாளர்களுக்கு தெரிந்திருக்கவில்லை என்பதையே குறிப்பிடலாம்.

இவ்வாறான மென்பொருள்கள் சரியான முறையில் பாவனையாளர்களிடம் சென்றடையாமைக்கான காரணங்கள்.
எமது தமிழ் மொழியானது பல பெருமைகளுக்கு உரிய மொழி. தமிழினை ஒரு மொழியாக மட்டும் கருதுவதோடு நிற்காமல் எமது கவுரவமாகவும் அதை பார்க்கிறோம். எனவே தமிழ்

மொழியில் நாம் உருவாக்கும் மென்பொருள்களினை வர்த்தகரீதியாக பார்க்காமல் மொழிக்கு ஆற்றும் ஒரு சேவையாகவே கருதப்படுகிறது. இதனால் அந்த மென்பொருள்களினை உருவாக்குவதுடன் தமது கடமை முடிந்துவிடுவதாக பலர் கருதுகின்றனர். மக்களுன் இவ்வாறான மென்பொருள்களினை காட்சிப்பொருள்களாக பார்க்கிறார்களேயன்றி பாவனைக்கானதாக உணரவில்லை.

எவ்வாறு சகல தமிழ் மக்களிடமும் இந்த தமிழ் மென்பொருள்களை கொண்டுசேர்க்கலாம்.
இந்த தமிழ் மென்பொருள்களை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டுமானால் முதலாவதாக அவற்றினை சரியானமுறையில் வரிசைப்படுத்தி அனைவரும் தெரிந்துகொள்ளும்வகையில் வைக்கவேண்டும். மேலும் மக்களின் தேவைகள் அறிந்து அவற்றினை பூர்த்திசெய்யக்கூடியான மென்பொருள்களினை உருவாக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், கணினிப்பாவனை மற்றும் தமிழ் மென்பொருள்கள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வினை ஏற்படுத்தவேண்டும்.

பாவனையாளர்களிடம் இருந்தான சரியான பின்னூட்டம்.
இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தற்பொழுதுள்ள மென்பொருள்களின் பாவனையாளர்களிடம் அவைதொடர்பான சரியான பின்னூட்டங்களை பெற்று பாவனையிலுள்ள மென்பொருள்களினை உரிய முறையில் மேம்படுத்துவதும் ஒரு பயனுள்ள செயற்பாடு.

மேலும், புலத்தில் உள்ள தமிழர் (இலங்கை, இந்தியா), புலம்பெயர் தமிழர் என இரண்டு பிரிவுகளாக தமிழ் மென்பொருள் பாவனையாளர்களை பார்க்கலாம். தமிழ் மென்பொருள் தொடர்பில் இந்த இரண்டு பிரிவினருக்குமான தேவைகள், பாவனைமுறை என்பன மிகவும் மாறுபட்டவை. அதனை கருத்தில்கொண்டு எவ்வாறான புதிய மென்பொருள்களின் உருவாக்கம் தொடர்பான கருத்துக்கள்.

மொத்தத்தில், கணினி மற்றும் இணையப் பாவனையில் தமிழ் மென்பொருள்களின் இருப்பும் பாவனையும் என்பது தொடர்பாக ஆராய்வதன்மூலம் தற்போது உள்ள தமிழ் மென்பொருள்களை சரியான மக்கள் பாவனைக்கு கொண்டுசெல்வதுடன் மக்களுக்கு தேவையான சரியான புதிய தமிழ் மென்பொருள்களை உருவாக்குவதிலும் கவனத்தை செலுத்தமுடியும்.